அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 01/2014

எனது இல: EST- 2/POLCY/03/0798-I
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திரச் சதுக்கம்
கொழும்பு 07

2014.01.21

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாணங்களின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள் அனைவருக்கும்

**அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துதல்**

அரசாங்க உத்தியோகத்தர்களினால் எய்தப்பட வேண்டிய அரசகரும மொழித் தேர்ச்சிக்குரியதான விடயங்களை ஆய்வு செய்து சிபாரிசுகளை சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் குழுவின் 2013.05.29 ஆம் திகதியிடப்பட்ட அறிக்கையின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டுள்ளவாறு அரசகரும மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதற்குரியதாக வெளியிடப்பட்ட 2007.05.28 ஆம் திகதியிடப்பட்டதும் 07/2007 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அரசாங்க நிருவாக சுற்றறிக்கைக்கும் அத்துடன் இதற்கு செய்யப்பட்ட திருத்தங்களுக்கும் பதிலாக பின்வரும் ஏற்பாடுகள் உரியதாக வேண்டுமென 2013.06.20 ஆம் திகதியன்று நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02. அரசாங்க சேவைக்கு/ மாகாண அரசாங்க சேவைக்கு திறந்த, மட்டுப்படுத்தப்பட்ட அத்துடன் திறமை அடிப்படையில் 2007.07.01 ஆம் திகதி தொடக்கம் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட அத்துடன் எதிர்காலத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் தாம் அரசாங்க சேவைக்கு இணைந்த அரசகரும மொழிக்கு மேலதிகமாக குறித்த பதவிக்குரிய மற்றைய அரசகரும மொழி தொடர்பிலான தேர்ச்சியை சேவையில் இணைந்து ஐந்து (05) வருட காலத்துக்குள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

I. மட்டுப்படுத்தப்பட்ட அத்துடன் திறமை அடிப்படையில் 2007.07.01 ஆம் திகதியிலிருந்து 07/2007(II) ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கை வெளியிடப்பட்ட 2011.07.13 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் 2011.07.13 ஆம் திகதியிலிருந்து ஐந்து (05) வருட காலப்பகுதிக்குள், தாம் புதிய நியமனம் பெற்ற உயர் பதவிக்குரிய மொழித் தேர்ச்சி மட்டத்தை எய்துதல் வேண்டும்.

II. 2007.07.01 ஆம் திகதியிலிருந்து 2010.06.30 ஆம் திகதி வரை திறந்த அடிப்படையில் அரசாங்க சேவைக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட/ நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு உரிய மொழித் தேர்ச்சி மட்டத்தை எய்துவதற்கு அவர்களுடைய நியமனத் திகதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள ஐந்து (05) வருட கால எல்லைக்கு மேலதிகமாக மற்றுமொரு இரண்டு (02) வருடங்களை கொண்ட சலுகைக் காலமொன்று வழங்கப்படுவதோடு, இந்தக் காலப்பகுதிக்குள் உரிய மொழித்தேர்ச்சி மட்டத்தை எய்துதல் வேண்டும்.

03. பதவிகளுக்கு கையளிக்கப்படும் பொறுப்புகளுக்கு அமைவாக தேவைப்படும் மற்றைய அரசகரும மொழித்தேர்ச்சி மட்டம் பின்வருமாறு நான்கு (04) வகுதிகளைக் கொண்டுள்ளன.

I. **1 ஆம் வகுதி**

(அ) இந்த தேர்ச்சி மட்டத்திற்கு உரியதாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சார்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையிலும் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழி மூலப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

(ஆ) அதேபோன்று க.பொ.த. (சா/த) இல் இரண்டாம் மொழி சிங்களம்/தமிழ் பாடத்தில் சித்திபெற்றிருப்பது எழுத்துமூலப் பரீட்சைக்கு மாற்றுத் தகைமையாகும்.

(இ) உத்தியோகத்தர் ஒருவர் சேவையில் இணைந்த அரசகரும மொழியல்லாத மற்றைய அரசகரும மொழி நிருவாக மொழியாக பயன்படுத்தப்படுகின்ற, மக்கள் பெரும்பான்மையாக வசிக்கும் இணைப்பு 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவொன்றில் உள்ள அரசாங்க நிறுவனமொன்றில் ஒரு வருட காலப்பகுதிக்கு அல்லது அதற்கு கூடுதலாக சேவையாற்றுதல் வாய்மொழிமூலப் பரீட்சைக்கு மாற்றுத் தகைமையாகும்.

II. **2 ஆம் வகுதி**

இந்த வகுதிக்கான தேர்ச்சி மட்டத்திற்கு உரியதாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சார்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையிலும் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிமூலப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

III. **3 ஆம் வகுதி**

(அ) இந்த வகுதிக்கான தேர்ச்சி மட்டத்திற்கு உரியதாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சார்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையிலும் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் வாய்மொழிமூலப் பரீட்சையிலும் சித்தியடைதல்.

அல்லது

(ஆ) தாம் சேவையில் இணைந்த சந்தர்ப்பத்தில் அமுலிலிருந்த சேவைப் பிரமாணக் குறிப்பின்/ ஆட்சேர்ப்புத் திட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக உரிய மற்றைய அரசகரும மொழித் தேர்ச்சியை பெறும் தேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(இ) சேவை ஆரம்ப பயிற்சியின் ஒரு பகுதியாக 3 ஆம் வகுதிக்காக விதித்துரைக்கப்பட்டுள்ள பாட சிபாரிசுக்கு அமைவாக ஆகக் குறைந்தது 150 மணித்தியாலங்கள் கொண்ட காலப் பகுதியின் சார்பில் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால்/ தேசிய மொழிக் கல்வி, பயிற்சி நிறுவனத்தினால் அல்லது இந்த நிறுவனங்களின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் சிங்களம்/ தமிழ் மொழி பயிற்சிநெறி ஒன்றில் கலந்து கொண்டதன் பின்னர் நடாத்தப்படும் எழுத்துமூல, வாய்மொழி மூல பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

IV. **4 ஆம் வகுதி**

(அ) இந்த வகுதிக்கான தேர்ச்சி மட்டத்திற்கு உரியதாக அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சார்பில் பரீட்சைகள் திணைக்களத்தினால் நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சையிலும் அரசகரும மொழிகள் திணைக்களத்தினால் நடாத் தப்படும் வாய்மொழிமூலப் பரீட்சையிலும் சித்தியடைதல் வேண்டும்.

அல்லது

(ஆ) இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனம் அல்லது மாகாண சபையொன்றினால் நிருவகிக்கப்படும் பயிற்சி நிறுவனமொன்றினால் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் வழி காட்டலின் கீழ் ஆகக்குறைந்தது 100 மணித்தியாலங்களுக்குள் 4 ஆம் வகுதிக்காக விதித்துரைக்கப்பட்டுள்ள பாட சிபாரிசுக்கு அமைவாக நடாத்தப்படும் அரசகருமமொழி தேர்ச்சியுடன் தொடர்புபட்ட பாட நெறியொன்றில் கலந்து கொண்டு அதன் பின்னர் அரசகரும மொழிகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் மீது நடாத்தப்படும் எழுத்துமூல, வாய்மொழிமூல பரீட்சையில் சித்தியடைதல்.

04. மேல் 1 ஆம் வகுதிக்கு ஏற்புடைத்தாக்கப்படும் மாற்று தகைமைகளை பூர்த்தி செய்வதன் மூலம் ஏனைய வகுதிகளுக்கு உரியதாகவுள்ள மொழித்தேர்ச்சியை பூர்த்தி செய்யும் தேவையிலிருந்து விலக்களிக்க முடியும்.

05. மேற்போந்த வகுதிகளுக்கான சேவைகள் இணைப்பு 01 இல் காட்டப்பட்டுள்ளது. மொழித்தேர்ச்சி பெற்றுக் கொள்ளப்பட வேண்டுமென புதிதாக இனங்காணப்பட்டுள்ள இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைக்கும் இலங்கை ஆசிரியர் சேவைக்கும் ஆட்சேர்ப்புச் செய்யப்படும் உத்தியோகத்தர்களுக்கும் 2007.07.01 ஆம் திகதி தொடக்கம் இந்த ஏற்பாடுகள் ஏற்புடைத்தாக்கப்பட வேண்டுமென்பதோடு, அவர்களுக்கு இந்த சுற்றறிக்கை அமுலுக்குவரும் திகதியிலிருந்து மொழித்தேர்ச்சி பெற்றுக் கொள்வதற்கு ஐந்து (05) வருடங்களைக் கொண்ட சலுகைக் காலமொன்று உரியதாகும்.

06. உரிய காலப் பகுதிக்குள் மொழித்தேர்ச்சியை எய்த தவறும் உத்தியோகத்தர்களுக்கான இந்த குறித்த காலப்பகுதி முடிவுற்றதும் வழங்கப்படவேண்டிய சம்பளவேற்றங்கள், இயைபுள்ள தகைமைகள் பெறும் வரைக்கும் இடைநிறுத்தப்படும்.

07 ஆங்கில மொழிமூலம் அரசாங்க சேவையில் இணைந்து கொள்ளும் உத்தியோகத்தர்கள் பின்வருமாறு அரசகரும மொழித்தேர்ச்சியினைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்:

I. ஒரு அரசகரும மொழியொன்றின் தேர்ச்சியை தாய்மொழி மட்டத்திலும் மற்றைய அரசகருமமொழித் தேர்ச்சியை இரண்டாம்மொழி மட்டத்திலும் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

II. தாம் தாய்மொழி மட்டத்திலான தேர்ச்சியைப் பெற்றுக் கொள்வது எந்த அரசகரும மொழியில் என்பது உத்தியோகத்தரின் விருப்பத்துக்கமைய தீர்மானிக்கப்படலாம். தாய்மொழி மட்ட தேர்ச்சியை சேவையில் இணைந்து மூன்று (03) வருட காலத்திற்குள் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதோடு, இரண்டாம் மொழி மட்டத்திலான தேர்ச்சியை சேவையில் இணைந்து ஐந்து (05) வருட காலத்திற்குள் பெற்றுக் கொள்ளுதலும் வேண்டும்.

III. ஆங்கில மொழிமூலம் சேவையில் இணைந்து கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவர் தாம் சேவையில் இணைந்து கொள்வதற்கு முன்னர் அல்லது சேவைக் காலப்பகுதியில் க.பொ.த. (சா/த) இல் சிங்களம்/ தமிழ் மொழியுடன் இலக்கியமும் சித்தியடைந்திருந்தால், குறித்த அரசகரும மொழி சம்பந்தமாக தாய்மொழி மட்டத்திலான தேர்ச்சியினை பெற்றுக் கொள்ளும் தேவையை உத்தியோகத்தர் பூர்த்தி செய்துள்ளாரென கருதப்படுதல் வேண்டும்.

IV. ஆங்கில மொழிமூலம் சேவையில் இணைந்து கொள்ளும் உத்தியோகத்தர் ஒருவருக்கு இரண்டாம் மொழி தேர்ச்சி மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு 04 ஆம் பந்தியில் உள்ள ஏற்பாடுகளை ஏற்புடைத்தாக்கிக் கொள்ளலாம்.

08. மேலே 03 ஆம் பந்தியில் உள்ள வகுதிகளுக்கு உரியதாக நடாத்தப்படும் எழுத்துமூலப் பரீட்சை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் சார்பில் பரீட்சைகள் திணைக்களத்தினாலும், வாய்மொழிமூலப் பரீட்சை அரசகரும மொழிகள் திணைக்களத்தினாலும், ஒரு வருடத்தில் இரண்டு தடவை என்ற வகையில், 2014 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நடாத்தப்படுதல் வேண்டும்.

09. 2013.06.20 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்விமான்கள் குழுவினால் பிரேரிக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வகுதிக்குமான பாடப் புத்தகங்கள் தயாரித்தல், இதற்கமைவாக தேர்ச்சி மட்டங்களுக்கு ஏற்ற பாடநெறிகளை தயாரித்தல் அதேபோன்று இந்த பாடநெறிகளை இடை ஊடாட்ட இருவெட்டுக்களாக (interactive CD) தயாரித்தல் அத்துடன் இந்த அரசகரும மொழிப்பாடநெறிகளை அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்கள் மூலமாகப் பிரபல்யப்படுத்துதல் ஆகியன தொடர்பில் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

10. மேலே 09 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தயாரிக்கப்படும் வரை அரசகரும மொழி தேர்ச்சினைப் பெற்றுக் கொள்வதற்கு மிகப் பொருத்தமான நூல்களை இனங்காண்பதற்கும், இந்த நூல்களின் ஸ்கேன் (Scan) பண்ணப்பட்ட PDF பிரதிகளை அரசகரும மொழிகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் உள்ளடக்குவதற்கும், இந்த நூல்களை போதுமான அளவு எண்ணிக்கையில் அச்சிட்டு அவற்றை அரசாங்க உத்தியோகத்தர்கள் தேவையான வகையில் பெற்றுக் கொள்ளக்கூடிய வழிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் அரசகரும மொழிகள் ஆணையாளரினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

11. உரிய மட்டங்களுக்குரிய வகுதிகளுக்கான பாடத்திட்டத்திற்கு அமைவாக அந்தந்த வகுதிகளின் தேர்ச்சி மட்டங்களுக்கு ஏற்புடையவாறு தயாரிக்கப்படும் மாதிரி வினாத்தாள் தொகுதியொன்றை பரீட்சைகள் திணைக்களமும் அரசகரும மொழிகள் திணைக்களமும் இணைந்து தயாரித்து அரசாங்க உத்தியோகத்தர்களின் பயன்பாட்டிற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

12. மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள வகுதிகளிலிருந்து 04 ஆம் மட்டத்தைவிட உயர்ந்த வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும், ஏதேனும் சேவையொன்றுக்கு/ பதவியொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அதற்காக வழங்கப்படும் சேவை ஆரம்பப் பயிற்சியின் ஒரு பகுதியாக தாம் சேவையில் இணைந்த அரசகரும மொழியல்லாத மற்றைய அரசகரும மொழித் தொடர்பில் தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்வதற்கு (ஆங்கில மொழி மூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்கள் ஏற்புடைத்தானவாறு அரசகரும மொழிகள் இரண்டில் ஒரு மொழியில் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்) தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சின் வழிகாட்டலின் கீழ் பின்வரும் துரித மொழிப் பயிற்சிப் பாடநெறியொன்றை உள்வாங்கும் பொருட்டு உரிய நியமன

அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

I. குறித்த பாடநெறியின் காலம் ஆகக்குறைந்தது இந்த சுற்றிக்கையின் 3 ஆம் வகுதிக்கான தேர்ச்சியினை அடைவதற்கு அவசியம் என குறிப்பிடப்பட்டுள்ள 150 மணித்தியாலங் களாகவிருத்தல்.

II. பாடநெறியின் இறுதியில் நடாத்தப்படும் எழுத்துமூல வாய்மொழிமூல பரீட்சையில் சித்தியடைதலானது 3 ஆம் வகுதிக்கான தேர்ச்சி மட்டத்திற்கான மாற்றுத் தகைமையொன்றாக கருதி நடவடிக்கை எடுத்தல்.

III. நியமனதாரர்கள் புதிய சேவை நிலையங்களில் இணைக்கப்படுவதற்கு முன்னர் முறையான சேவை ஆரம்பப் பயிற்சி நடாத்தப்படாத பதவிகள்/ சேவைகளுக்காக முற்றுமுழுதாக மொழித் தேர்ச்சியினை வழங்குவதற்கு மாத்திரம் அல்லது பயிற்சிப் பாடநெறியொன்றை கட்டாயமாக நடாத்துதல்.

13. இந்த சுற்றறிக்கையின் இணைப்பு 1 இன் கீழ் காட்டப்பட்டுள்ள வகுதிக்குள் சேர்க்கப்படாத ஏதேனும் பதவியொன்று அல்லது சேவையொன்று இருக்குமாயின், இந்தப் பதவிக்கு அல்லது சேவைக்கு ஏற்புடைத்தான அரசகரும மொழித் தேர்ச்சி மட்டத்தை தீர்மானித்தல் அடங்கலாக அரசாங்க உத்தியோகத்தர்களின் அரசகரும மொழித் தேர்ச்சி தொடர்பில் காலத்துக்கு காலம் எழும் விடயங்களைப் பரிசீலனை செய்து இது சம்பந்தமாக ஏற்ற தீர்மானங்களை எடுக்கும் பொருட்டு, பின்வரும் உத்தியோகத்தர்கள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்படும்.

I. தாபனப் பணிப்பாளர் நாயகம் - (தலைவர்);

II. அரசகரும மொழிகள் ஆணையாளர்;

III. முகாமைத்துவச் சேவைகள் பணிப்பாளர் நாயகம்;

IV. அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளரினால் பெயர் குறித்து நியமிக்கப்படும் உத்தியோகத்தர் ஒருவர்; அத்துடன்

V. பிரதிநிதித்துவங்களை கவனத்திற் கொள்ளும் சந்தர்ப்பத்தில் உரிய சேவைகளின்/ பதவிகளின் நிருவாக அதிகாரி அல்லது அவரால் பெயர் குறித்து நியமிக்கப்படும் சிரேட்ட உத்தியோகத்தர் ஒருவர்.

14. தாம் சேவையில் இணைந்த அரசகரும மொழியல்லாத மற்றைய அரசகரும மொழியில் வாய்மொழிமூல தேர்ச்சியினை பெற்றுக் கொள்வதற்கு அரச உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் வாய்ப்பளிக்கும் முகமாக 02 ஆம் இணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச செயலாளர் பிரிவொன்றிலுள்ள அரசாங்க நிறுவனமொன்றில் ஆகக்குறைந்தது ஒரு (01) வருடகாலம் தொடர்ச்சியாக சேவையாற்றுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கும் விதத்தில் முதல் நியமனத்தின் போது இந்த சேவை நிலையங்களில் இணைப்பதற்கும் உரிய பதவியின் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இந்த வாய்ப்பு கிடைக்கும் விதத்தில் பொருத்தமான இடமாற்றக் கொள்கையொன்றை அறிமுகப்படுத்துவதற்கும் நியமன அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

15. உரிய அரசகரும மொழித் தேர்ச்சியினைப் பெற்றிருப்பதை மெச்சும் வகையில் உத்தியோகத்தர்கள் வெளிநாட்டு புலமைப்பரிசில்கள், பயிற்சிப் பாடநெறிகள் அல்லது பட்டப்பின் படிப்பு போன்றவற்றிற்கு விண்ணப்பிக்கும் போது அரசகரும மொழித் தொடர்பில் தேர்ச்சி பெற்றுள்ள உத்தியோகத்தர்களுக்கு முன்னுரிமை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். ஏற்கனவே நடைமுறையிலுள்ள 03/2007 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிருவாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளையும்

கவனத்திற் கொண்டு, தாம் சேவையில் இணைந்த அரசகருமமொழியல்லாத மற்றைய அரசகரும மொழி சம்பந்தமாக இந்த சுற்றறிக்கையின் மூலம் விதித்துரைக்கப்பட்டுள்ள தேர்ச்சியைவிட கூடிய தேர்ச்சியினைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க உத்தியோகத்தர்களை ஊக்குவிக்கும் பொருட்டு பொருத்தமான ஊக்குவிப்பு முறையொன்றை எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

16. அரசாங்க சேவைக்கு ஏற்புடைத்தாக்கப்படும் மேற்போந்த மொழித் தேர்ச்சித் தேவையை அரசாங்க கூட்டுத்தாபனங்களிலும் நியதிச்சட்டசபைகளிலும் அரசாங்க வங்கிகளிலும் முற்றுமுழுதாக அரசுடைமையாக்கப்பட்ட கம்பனிகளிலும் உள்ள பதவிகளுக்கும், இந்த சுற்றறிக்கை அமுலுக்கு வரும் திகதியன்று அல்லது இதற்குப் பின்னர் சேவையில் இணைந்து கொள்ளும் உத்தியோகத்தர்களுக்கும் ஏற்புடையதாகுமென குறிப்பிட்டு சுற்றறிக்கையொன்றை வெளியிடுவதற்கு நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

17. சகல ஆட்சேர்ப்பு திட்டங்களிலும் சேவை பிரமாணக் குறிப்பிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மற்றைய அரசகரும மொழி சம்பந்தமான ஏற்பாடுகள் இந்த சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக திருத்தியமைக்கப் பட்டதாக கருதி நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும்.

18. இந்த சுற்றறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் மீது வெளியிடப்படுகின்றது.

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு

| | சேவை / பதவி | பெற வேண்டிய தேர்ச்சி மட்டம் | | | |
|---|---|---|---|---|---|
| | | வகுதி 1 | வகுதி 2 | வகுதி 3 | வகுதி 4 |
| 01 | இலங்கை நிருவாக சேவை | ✓ | | | |
| 02 | இலங்கை கணக்காளர் சேவை | ✓ | | | |
| 03 | இலங்கை திட்டமிடல் சேவை | ✓ | | | |
| 04 | இலங்கை கல்வி நிருவாக சேவை | ✓ | | | |
| 05 | இலங்கை கமத்தொழிற் சேவை | ✓ | | | |
| 06 | உள்நாட்டு இறைவரி சேவை | ✓ | | | |
| 07 | இலங்கை வரி மதிப்பீட்டு சேவை | ✓ | | | |
| 08 | இலங்கை கணக்காய்வு சேவை | ✓ | | | |
| 09 | நீதி உத்தியோகத்தர்கள் | ✓ | | | |
| 10 | இலங்கை பொலிஸ் சேவையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் அதற்கு மேற்பட்ட தரங்கள் | ✓ | | | |
| 11 | நீதி உத்தியோகத்தர்கள் | ✓ | | | |
| 12 | இலங்கை  வெளிநாட்டு சேவை | ✓ | | | |
| 13 | இலங்கை சுங்க சேவை | ✓ | | | |
| 14. | அகில இலங்கை சேவையைச் சாராத திணைக்கள ரீதியிலான சேவைகளிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்கள் | ✓ | | | |
| 15. | இலங்கை அளவையாளர் சேவை | ✓ | | | |
| 16. | இலங்கை கட்டடக்கலைஞர் சேவை | ✓ | | | |
| 17. | இலங்கை அதிபர்கள் சேவை | ✓ | | | |
| 18. | அரசாங்க முகாமைத்துவ உதவியாளர் சேவை மற்றும் அதற்கு சமமான திணைக்கள சேவைகள் | | ✓ | | |
| 19 | இலங்கை பொலிஸ் சேவையில் உதவி பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு கீழ் நிலையில் பதவி வகிக்கும் உத்தியோகத்தர்கள் | | ✓ | | |
| 20 | கிராம உத்தியோகத்தர்கள் | | ✓ | | |
| 21 | விரிவாக்கல் சேவைகளில் ஈடுபட்டுள்ள அனைத்து துணை உத்தியோகத்தர்கள் (தொழினுட்ப சேவை போன்ற சேவைகள்) | | ✓ | | |
| 22 | பொது சுகாதார பரிசோதகர் | | ✓ | | |
| 23 | வரவேற்பு உத்தியோகத்தர் | | ✓ | | |
| 24 | இலங்கை கணக்காய்வு பரிசோதகர் சேவை | | ✓ | | |

| | சேவை / பதவி | பெற வேண்டிய தேர்ச்சி மட்டம் | | | |
|---|---|---|---|---|---|
| | | வகுதி 1 | வகுதி 2 | வகுதி 3 | வகுதி 4 |
| 25 | நூலகர் சேவை | | ✓ | | |
| 26 | இலங்கை விஞ்ஞான சேவை | | | ✓ | |
| 27 | இலங்கை பொறியியல் சேவை | | | ✓ | |
| 28 | அரச மருத்துவ உத்தியோகத்தர்கள் மருத்துவ உத்தியோகத்தர்கள் | | | ✓ | |
| 29. | இலங்கை விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | | | ✓ | |
| 30 | தாதிச் சேவை | | | ✓ | |
| 31 | குடும்ப சுகாதார சேவை | | | ✓ | |
| 32 | இலங்கை ஆயுள்வேத சேவை | | | ✓ | |
| 33 | இலங்கை ஆசிரியர் சேவை | | | ✓ | |
| 34 | துணை மருத்துவ சேவை/ நிறைவுகாண் மருத்துவவியல் தொழில்வல்லுநர் சேவை | | | ✓ | |
| 35 | ஆரம்பமட்ட உத்தியோகத்தர்கள் | | | | ✓ |

**சிங்கள மொழி நிருவாக மொழியாக பயன்படுத்தும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகள்**

**கொழும்பு மாவட்டம்**

1 கடுவெல
2 ஹோமாகம
3 பாதுக்க
4 மஹரகம
5 மொறட்டுவ
6 கெஸ்பாவ

**கம்பஹ மாவட்டம்**

7 கட்டான
8 திவுலபிட்டிய
9 மீரிகம
10 மினுவன்கொட
11 ஜா-எல
12 கம்பஹ
13 வாகே (தொம்பே)
14 மஹர
15 பியகம

**களுத்துறை மாவட்டம்**

16 ஹொரண
17 இங்கிரிய
18 மதுராவெல
19 மில்லனிய
20 களுத்துறை
21 அகலவத்த
22 பாலிந்த நுவர
23 வலல்லாவிட்ட

**கண்டி மாவட்டம்**

24 தும்பனே
25 உடுதும்பர
26 மினிப்பே
27 ஹதரலியத்த
28 யட்டிநுவர
29 பாத்தஹேவாஹட்ட

**மாத்தளை மாவட்டம்**

30 தம்புள்ளை
31 நாவுல
32 பல்லேபொல
33 லக்கல - பல்லேகம
34 வில்கமுவ

**காலி மாவட்டம்**

| | |
|---|---|
| 35 | பென்தொட்ட |
| 36 | பலபிட்டிய |
| 37 | கரன்தெனிய |
| 38 | அல்பிட்டிய |
| 39 | நியாகம |
| 40 | தவலம |
| 41 | நெலுவ |
| 42 | நாகொட |
| 43 | பத்தேகம |
| 44 | வெலிவிட்டிய - திவிதுர |
| 45 | அம்பலங்கொட |
| 46 | கோனபீனுவல |
| 47 | ஹிக்கடுவ |
| 48 | போபே - போத்தல |
| 49 | அக்மீமன |
| 50 | யக்கலமுல்ல |
| 51 | இமதூவ |
| 52 | ஹபராதுவ |

**மாத்தளை மாவட்டம்**

| | |
|---|---|
| 53 | பிட்டபத்தர |
| 54 | பஸ்கொட |
| 55 | முலட்டியன |
| 56 | அத்துரலிய |
| 57 | அக்குரஸ்ச |
| 58 | மாலிம்பட |
| 59 | கம்புறுபிட்டிய |
| 60 | ஹக்மன |
| 61 | கிரிந்த புஹுல்வெல்ல |
| 62 | திஹகொட |
| 63 | வெலிகம |
| 64 | மாத்தறை பட்டினம் |
| 65 | தெவிநுவர |
| 66 | திக்வெல்ல |

**அம்பாந்தோட்டை மாவட்டம்**

67 சூரியவெவ
68 லுனுகம்வெஹர
69 திஸ்சமஹாராமய
70 அம்பாந்தோட்டை
71 அம்பலன்கொட
72 அங்குணுகொலபெலஸ்ச
73 வீரகட்டிய
74 கட்டுவன
75 வலஸ்முல்ல
76 ஒக்கேவெல
77 பெலிஅத்த
78 தங்கல்ல

**குருநாகல் மாவட்டம்**

79 கிரிபாவ
80 கல்கமுவ
81 அஹட்டுவெவ
82 அம்பன்பொல
83 கொட்டவெஹர
84 நிக்கவரட்டிய
85 மஹவ
86 பொல்பித்திகம
87 இப்பாகமுவ
88 கனேவத்த
89 வாரியபொல
90 பிங்கிரிய
91 படுவஷ்நுவர கிழக்கு
92 பமுனாகொட்டுவ
93 மாஸ்பொத
94 வீரம்புகெதர
95 குளியாபிட்டி மேற்கு
96 பன்னல
97 நாரம்மல
98 அலவ்வ

**புத்தளம் மாவட்டம்**

99 கருவலகஸ்வெவ
100 நவகத்தேகம
101 மஹகும்புக்கடவல
102 ஆனமடுவ
103 ஆரச்சிகட்டுவ
104 மாதம்பே
105 மஹவெவ
106 வென்னப்புவ
107 தங்கொட்டுவ

**அநுராதபுரம் மாவட்டம்**

108 பதவிய
109 கெபிதிகொல்லாவ
110 மதவாச்சிய
111 மஹவிலச்சிய
112 நுவரகம் பலாத்த - மத்தி
113 கலென்பிந்துனுவெவ
114 மிஹின்தலை
115 நுவரகம பலாத்த - கிழக்கு
116 நொச்சியாகம
117 ராஜங்கனை
118 தம்புத்தேகம
119 தலாவ
120 திரப்பனை
121 பலுகஸ்வெவ
122 கல்னாவ

**பொலன்நறுவை மாவட்டம்**

123 ஹிங்குரக்கொட
124 மெதிரிகிரிய
125 திம்புலாகல
126 அலஹெர

**பதுளை மாவட்டம்**

127 மஹியங்கனை
128 ரிதீமாலியத்த
129 மீகஹகிவுல
130 கந்தகட்டிய

**மொனராகலை மாவட்டம்**

131 பிபில
132 மடுல்ல
133 சியம்பலாண்டுவ
134 வெல்லவாய
135 புத்தல
136 கதிர்காமம்
137 தனமல்வில
138 செவணகல

**இரத்தினபுரி மாவட்டம்**

139 அஹலியகொட

140 குருவிட்ட

141 கிரிஎல்ல

142 ஒப்பநாயக்க

143 அலபாத்த

144 வெலிகேபொல

145 அம்பிலிபிட்டிய

146 கொலொன்ன

**கேகாலை மாவட்டம்**

147 ரம்புக்கனை

148 அரணாயக்க

149 கேகாலை

150 கலிகமுவ

151 வரக்காபொல

**வவுனியா மாவட்டம்**

152 வவுனியா தெற்கு

**முல்லைத்தீவு மாவட்டம்**

153 வெலிஓயா

**அம்பாறை மாவட்டம்**

154 தெஹிஅத்தகண்டிய

155 பதியதலாவ

156 மஹஓயா

157 உகண

158 அம்பாறை

159 தமன

160 லாகுகல

**திருகோணமலை மாவட்டம்**

161 பதவி ஸ்ரீ புர

162 கோமரன்கடவல

**தமிழ் மொழி நிருவாக மொழியாக பயன்படுத்தும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் பிரதேச செயலாளர் பிரிவுகள்**

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

1 ஊர்காவற்றுறை
2 காரைநகர்
3 வலிகாமம் மேற்கு (சங்கானை)
4 வலிகாமம் தென்மேற்கு (சங்கானை)
5 வலிகாமம் வடக்கு
6 வலிகாமம் தெற்கு (உடுவில்)
7 வலிகாமம் கிழக்கு (கோப்பாய்)
8 வடமாராச்சி தென்மேற்கு (கரவெட்டி)
9 மருதங்கேணி (வடமாராச்சி கிழக்கு)
10 வடமாராச்சி வடக்கு (பருத்தித்துறை)
11 தென்மாராச்சி (சாவகச்சேரி)
12 நல்லூர்
13 யாழ்ப்பாணம்
14 வேலணை
15 நெடுந்தீவு

**மன்னார் மாவட்டம்**

16 மன்னார் பட்டினம்
17 மாந்தை மேற்கு
18 மடு
19 நானாட்டான்
20 முசலி

**வவுனியா மாவட்டம்**

21 வவுனியா வடக்கு
22 வவுனியா
23 வெங்கலசெட்டிகுளம்

**முல்லைத்தீவு மாவட்டம்**

24 துணுக்காய்
25 மாந்தை கிழக்கு
26 புதுக்குடியிருப்பு
27 ஒட்டுசுட்டான்
28 கரைத்துறை பற்று

**கிளிநொச்சி மாவட்டம்**

29 பச்சிலைப்பள்ளி
30 கண்டாவளை
31 கரச்சி
32 பூநகரி

**மட்டக்களப்பு மாவட்டம்**

33 கோரளைபற்று வடக்கு (வாகரை)
34 கோரளைபற்று மத்தி
35 கோரளைபற்று மேற்கு (ஓட்டமாவடி)
36 கோரளைபற்று (வாழைச்சேனை)
37 கோரளைபற்று தெற்கு (கிரான்)
38 ஏறாவூர்பற்று
39 ஏறாவூர் நகரம்
40 மண்முனை வடக்கு
41 மண்முனை மேற்கு
42 மண்முனைபற்று (ஆரையம்பதி)
43 மண்முனை தெற்மேற்கு
44 போரதீவுபற்று
45 மண்முனை தெற்கு எருவில்பற்று

**அம்பாறை மாவட்டம்**

46 நாவிதன்வெளி
47 சம்மாந்துறை
48 கல்முனை தமிழ்
49 கல்முனை
50 சாய்ந்தமருது
51 காரைதீவு
52 நிந்தவூர்
53 அட்டாளைச்சேனை
54 இறக்காமம்
55 அக்கரைபற்று
56 ஆலையடிவேம்பு
57 திருக்கோவில்
58 பொத்துவில்

**திருகோணமலை மாவட்டம்**

59 குச்சவெளி
60 கிண்ணியா
61 மூதூர்
62 வெருகல் (ஈச்சிலம்பத்து)